சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.99/2018

03.06.2025

வா.சா.1 திருமதி. ஆர்த்தி, க/பெ.யுவராஜ்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது தகப்பனார் செட்டில்மெண்ட் எழுதிவைத்ததற்கு உண்டான மூல ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. செட்டில்மெண்டில் கண்ட சொத்து எனது தகப்பனாருக்கு நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் கிடைத்தது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனது தகப்பனாருக்கு உரிய முறையில் நில உச்சவரம்பு சட்டத்தின்கீழ் வழஙப்படவில்லை என்றால் சரியல்ல. அப்படி வழங்கியிருந்தால் அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், வழங்காததால் தான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்து எப்போதும் எனது அனுபவத்திலோ எனது தகப்பனார் அனுபவத்திலோ இருந்தது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை 25 வருடங்களாக நானோ எனது தகப்பனாரோ அனுபவம் செய்துவந்தோம் என்பதை காட்டும் விதமாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். தாவா சொத்து பிரதிவாதி அனுபவத்தில்தான் உள்ளது எனறாலும் எனது அனுபவத்திலோ எனது தகப்பனார் அனுபவத்திலோ இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி பெயரில்தான் சிட்டா அடங்கல் உள்ளது என்றாலும் பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள நிலத்திற்கு பயிர்காப்பீடு பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 1986 ஆம் வருடம் பிரதிவாதிக்கு உறுதிமொழி ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதனடிப்படையில் 1986 முதல் இன்றைய தேதிவரை தாவா சொத்து பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு அனுபவம் இல்லாத தாவா சொத்தை பொறுத்து நானும் எனது தகப்பனாரும் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. என் பெயரில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் பெயரளவில் தான் என்றாலும் அதனடிப்படையில் தாவா சொத்து எக்காலத்திலும் என்னிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து நான் விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கோரி வழக்கு

தாக்கல் செய்யாமல் நிரந்தர உறுத்துக்கட்டளை மட்டும் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. பிராதில் எந்த தேதியில் பிரதிவாதி எனது அனுபவத்தை இடையூறு செய்தார் என்று வழக்கு மூல தேதியை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் வழக்கு மூலத்தில் சொல்லவில்லை. பிராதில் ஆகஸ்ட் மாதம் 4 வது வாரம் என பொதுவாக சொல்லப்பட்டுள்ளது என்றாலும் தேதி குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்பதால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் காவல்துறையில் புகார் கொடுத்ததற்கோ புகார் ரசீது வழங்கியதற்கோ உண்டான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும் எனது தகப்பனாரும் வெளியூரில் வசித்து வருகிறோம் என்றாலும் பொய்யான வழக்கு மூலத்தின் அடிப்படையில் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சொத்தினை உரிமையை தீர்மானிக்க கூடியது இல்லை என்றால் சரியல்ல. நான் சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.